27.02.2026

O.S.No. 52/2022

PW1– முனீஸ்வரன்– த/பெ. இசக்கி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.02.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( 1,2 பிரதிவாதிகள் தரப்பில்)

1. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவை என்றால் சரிதான்.

2. என் தகவலின் பேரில் தான் முதல் விசாரணை வாக்குமூலம் தயார் செய்யப்பட்டு என்னால் படித்து பார்க்கப்பட்டு கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

3. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சுவற்றில் வெள்ளை அடிக்கவும், பராமரிக்கக் கோரியும் அதற்கான விடப்பட்ட காலி இடத்தை அனுபவம் செய்யக்கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

4. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரை படித்து பார்த்தேனா என்றால் இல்லை.

5. பிரதிவாதி என்ன பரிகாரம் கோரி எதிர் கோரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் என் இடத்தை அவர் இடம் என உரிமை கோரி எதிர் கோரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. பிராது 1ம் தபசில் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

7. பிராது தபசில் சொத்தானது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் வாதி முன் பாத்தியஸ்தரான ஆச்சியம்மாளுக்கு பாத்தியப்படுத்தினார்கள் என்றால் சரிதான்.

8. ஆச்சியம்மாளுக்கு உரிமையான சொத்து பிராது தபசில் 1ம் சொத்து என்றால் சரிதான்.

9. ஆச்சியம்மாளிடம் நேரடியாக வா.சா.ஆ.3 மூலம் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

10. வா.சா.ஆ.3ன் மூலம் தான் எனக்கு 1ம் தபசில் சொத்து பாத்தியம் என உரிமை கோருகிறேன் என்றால் சரிதான்.

11. பிராது 1ம் தபசில் சொத்திற்கு என் பெயரில் பட்டா இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் பட்டா இருந்திருந்தால் நான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் உடல் சுகமில்லாமல் மருத்துவமனையில் இருந்து வருவதால் என்னால் பட்டாவை தாக்கல் செய்ய இயலவில்லை.

12. பிராது 1ம் தபசில் சொத்தின் மேல்பக்கம் பிராது 2ம் தபசில் சொத்து உள்ளது என்றால் சரிதான்.

13. பிராது 1ம் சொத்தை நான் காலி மனையாக கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

14. நான் கிரையம் பெற்ற பின் பிராது 1ம் தபசில் சொத்தில் வீடு கட்டினேன் என்றால் சரிதான். நான் எப்போது வீடு கட்டினேன் என்றால் 2017–2018 ஆம் வருடம் கட்டினேன்.

15. நான் வீடு கட்டும் போது இடத்தை அளந்து கட்டினேன் என்றால் சரிதான்.

16. நான் வீடு கட்டும் போது தென்காசி நகராட்சியில் அனுமதி பெற்று வீடு கட்டினேன் என்றால் சரிதான்.

17. கட்டிட வரைபட அனுமதி என் வசம் உள்ளது என்றால் சரிதான். அதனை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

18. நான் ஆச்சியம்மாளிடன் கிரையம் பெற்ற சொத்தின் கிழமேல் அளவு 13.12 அடி என்றால் சரியல்ல 13.50 அடி வாங்கினேன். தென்வடல் அளவு 26.25 அடி என்றால் சரிதான்.

19. என் வீட்டின் மேலச்சுவர் தான் என் இடத்தின் மேல் அத்து என்றால் சரிதான்.

20. என் வீட்டின் மேலச்சுவருக்கு அடுத்த மேல்பக்கம் பிளாட் எண்.11 உள்ளது என்றால் சரிதான்.

21. பிராது 1ம் தபசில் சொத்திற்கு கீழ்பக்கம் பிளாட் எண்.9 உள்ளது என்றால் சரிதான்.

22. பிராது 1ம் தபசில் சொத்திற்கு தென்பக்கம் பிளாட் எண்.25 மற்றும் 26 உள்ளது என்றால் சரிதான்.

23. நான்கு மனைகளையும் சேர்த்து தான் நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

24. நான் வீடு கட்டும் முன்பே பிரதிவாதி அவரது இடத்தில் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

25. பிரதிவாதி வீட்டின் கீழ்பக்க சுவரில் கிழக்கு பக்கமாக ஒரு ஜன்னலும், சன்சேடும் வைத்துள்ளார் என்றால் சரிதான். நான் இந்த விவரத்தை தவறாக ஜன்னல் மற்றும் சன்சேடு இல்லை என பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

26. பிராது 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதி தான் 2ம் தபசில் சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

27. பிராது 2ம் தபசில் சொத்தின் கிழமேல் அளவு எவ்வளவு என்றால் 2.5 அடி.

28. பிராது 2ம் தபசில் சொத்தானது நான் ஆச்சியம்மாளிடம் கிரையம் பெற்ற 13.12 அடிக்கு உட்பட்டதல்ல என்றால் சரியல்ல.

29. என் வீட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள பிளாட் எண்கள் 11,12,13– ஐ தான் பிரதிவாதி கிரையம் பெற்று வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான்.

30. பிராது 2ம் தபசில் சொத்தானது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மனை எண்.11 க்கு உட்பட்ட பகுதி என்றால் சரியல்ல.

31. தபசில் சொத்தை பார்வையிடுவதற்கு நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் வந்தார் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கை சரியானதா என்றால் படித்து பார்க்கவில்லை.

32. ஆணையர் அறிக்கைக்கு நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன்.

33. என் வீட்டின் மேலச்சுவரில் ஒரு ஜன்னல் உள்ளது என்றும் அது பிரதிவாதியிடம் அனுமதி பெற்று வைத்தேன் என்றால் சரியல்ல ஜன்னல் உள்ளது அதை நான் தான் வைத்தேன்.

34. என் வீட்டு மேலச்சுவரில் தண்ணீர் பைப், கழிவுநீர் பைப் இல்லை என்றால் சரியல்ல இருந்தது அதனை பிரதிவாதி தான் அப்புறப்படுத்தினார். நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றால் சரியல்ல.

35. பிரதிவாதி வீட்டின் கீழ்பக்க சுவரில் தண்ணீர் பைப், கழிவுநீர் பைப் மற்றும் மின் இணைப்பு பெட்டி உள்ளது என்றால் சரியல்ல தண்ணீர் பைப் மற்றும கழிவுநீர் பைப் தற்போது வைக்கப்பட்டது மின் இணைப்பு பெட்டி இல்லை. அந்த இடம் என் இடமாகும்.

36. பிராது 2ம் தபசில் மழைநீர் தொட்டி உள்ளது என்றால் சரிதான் அதை நான் ஊருக்கு சென்ற போது அமைத்துள்ளனர்.

37. பிராது 2ம் சொத்தில் உரிமை உள்ளதால் தான் பிரதிவாதி அதில் இரும்பு கேட் வைத்துள்ளார் என்றால் சரியல்ல நான் மருத்துவமனைக்கு சென்ற போது என் இடத்தில் இரும்பு கேட் வைத்துள்ளார். நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் நான் ஊரில் இருந்த போது தான் பிரதிவாதி இரும்பு கேட் வைத்தார் என்றால் சரியல்ல.

38. நான் மருத்துவமனைக்கு சென்றதாக வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றால் சரியல்ல.

39. நான் ஜன்னல் வழியாக குப்பைகளை போட்டதால் தான் எனக்கும் பிரதிவாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த ஜன்னலை அகற்றச் சொன்னதால் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

40. நான் என் வீட்டின் மேலச்சுவரில் ஜன்னல் வைத்து, மேல்பக்க சுவரை பராமரிப்பதற்காக காலி இடம் வைத்ததாக வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றால் சரியல்ல.

41. பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உரிமையியல் வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் பார்க்க சொன்னார்கள். நான் வழக்கிற்காக புகார் கொடுத்தேன் என தவறாகக் கூறுகின்றேன் என்றும் உண்மையில் புகார்

கொடுத்திருந்தால் நான் அதை ஆவணமாக தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

42. நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன் என்பதற்கான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

43. பிராது 2ம் தபசில் எனக்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

44. பிராது 2ம் தபசில் சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

45. பிராது 2ம் தபசில் சொத்தைப்பொறுத்து நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்தக்கதல்ல என்றும் பிரதிவாதி கோரியுள்ள எதிர் கோரிக்கை பரிகாரம் செலவுத் தொகையுடன் அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

46. என் வழக்கு பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/-J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி